**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**ஆத்தூர்**

**------**

**அசல் வழக்கு எண்.2/2021**

**2025 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெரால்டு செல்வநாதன் | ஜாதி | : | |
| த.பெ | : | சம்மனசு | தொழில் | : | தனியார் பணி |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2025 |

தேதி : 01.04.2025

**14, 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் மாங்குடி இருதயம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தக்கள் என்று சொன்னால் சரிதான். மாங்குடி இருதயம் என்பவர் இறக்கும்பொழுது 1 ஆது வாதி மற்றும் அவரது தம்பி மரியசூசை என்பவரும் இளவர்கள் என்று சொன்னால் சரிதான். அதனால் அந்த சொத்துக்களை அவரது மூத்த மகன் அந்தோணி என்பவர் மேற்பார்வையில் 1வது வாதியின் தயார் சேசிலியம்மாள் என்பவர் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். மரியசூசை என்பவர் இறந்தபோது 10,11 பிரதிவாதிகள் இளவர்கள் என்றால் சரிதான். 30.11.1969 தேதியில் ஏற்பட்ட பஞ்சாயத்து முச்சலிக்காவிலும், 24.05.1979 தேதியிட்ட தான பத்திரத்திலும், 12 மற்றும் 13 வது பிரதிவாதிகளின் தாயார் சந்தியாகு அம்மாள் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் கிறிஸ்த்துவ வாரிசு உரிமை சட்டப்படி தாவா சொத்தில் அனைவருக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் காரணமாக திருமணமாக சகோதரிகளான மரியபுஷ்பம்,

சந்தியாகு அம்மாளின் பாகத்தை கருத்தில் கொண்டு தாவா சொத்துக்களின் அசல் ஆவணங்கள் அனைத்தும் மரியபுஷ்பம் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். மரியபுஷ்பம் என்பவர் இந்நீதிமன்றத்தில் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்து 5 இல் 1 பாகம் கேட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். 03.01.1973 தேதியில் சேசிலியம்மாள் என்பவர் பொது குடும்ப சொத்துக்களின் நிர்வாகி என்பதன் அடிப்படையில் ஒரு பகுதி சொத்துக்களை பொறுத்து அமலோற்பவம் என்பவருடன் ஒரு பரிவர்த்தனை ஒப்பந்தம் ஏற்படுதிக்கொண்டார் என்றால் சரிதான். சேசிலியம்மாள் என்பவர் 1975 வருடம் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். 12 ஆம் பிரதிவாதியின் மகளான 15 வது பிரதிவாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1981 ஆம் வருடம் நடைபெற்றது. மேற்கண்ட திருமணமான தேதியில் இருந்து 12 ஆம் பிரதிவாதியின் 5 இல் 1 பாகத்தை 15 வது பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். 14.04.2014 ஆம் தேதியிட்ட உயில் சாசனம் மூலம் 15 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி வைத்துவிட்டு கடந்த 24.01.2020 ஆம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1 வது பிரதிவாதிக்கு பிரியக்கூடிய 30 இல் 1 பங்கு சொத்தில், 14 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு 3 இல் 1 பங்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

**Sd/-Thiru.P.Jaisankar,**
District Munsif cum Judicial Magistrate,
Athoor.